1974 மார்ச் 19]

அந்த நேரத்தைப் பிரித்து ஒரு குறிப்பிட்ட நேரம் காலையிலும், பிறகு மாலை 5 மணிக்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட நேரமும் என்ற வகையில் செய்வதற்கு ஆலோசிக்கலாம், அதுபற்றி முறையீடு வந்தால்தான் அது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த நூல் நிலையத்திற்கு வசதி படைத்தவர்கள் மட்டுமே சென்று புத்தகம் வாங்கிப் படிக்கும் நிலை இருக்கிறது. ஆக, வசதி இல்லாதவர்கள் சென்று படிக்கும் நிலையை உருவாக்க இந்த கன்னிமரா நூல் நிலையத்தை சென்னையின் மையப் பகுதியில் அமைத்தால் நலமாக இருக்கும் என்று கருதப்படுகிறதே, இதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த நூலகம் கூடுமான வரையில் சென்னையின் மையப் பகுதியில்தான் இருக்கிறது. வசதி படைத்தவர்கள் தான் செல்ல முடியும், மற்றவர்கள் செல்ல முடியாது என்பதல்ல. அங்கேயிருந்து புத்தகங்கள் எடுத்துச் செல்ல விரும்புகிறவர்களிடமிருந்து எச்சரிக்கை டிபாசிட்டாக ரூ. 5 அல்லது ரூ. 10*-ம் வசூலிக்கிறார்கள். அதுவும் திருப்பி வாங்கிக் கொள்ளக்கூடிய தொகை தான். அந்த நூலகத்தை எல்லோரும் போய்ப் பயன்படுத்தி கொள்ளலாம். கன்னிமாரா லைப்ரரி இருக்கும் கட்டடத்தைப் போல் இன்னொரு கட்டடம் கிடைப்பது என்பது அரிது. அந்தக் கட்டடம் இருக்கிற இடம், சென்னை நகரத்தின் விரிவான பகுதியைப் பார்க்கிறபோது, நகரின் மைய இடமாகத்தான் கருதவேண்டும்.

திருப்பூர் ஒன்றியப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள்.

* 494 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மங்கலம், அய்யங்காளி பாளையம், விஜயபுரம், பெருமாநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் உள்ளனவா ?

(இ) இல்லை எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் மங்கலம் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளியில் மட்டும் அறிவியல் ஆய்வுக்கூடம் உள்ளது.

---

* 528-ம் பக்கத்திலுள்ள மாண்புமிகு அமைச்சரின் திருத்த அறிக்கையைக் காண்க.

(இ) ஒவ்வோராண்டும் அறிவியல் ஆய்வுக்கூட மானியம் வழங்குகையில், மாணவர் எண்ணிக்கை அதிகமாக உள்ள பள்ளிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. அய்யங்காளிபாளையம், விஜயபுரம், பெருமாநல்லூர் ஆகிய ஊர்களில் உள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால் அப்பள்ளிகளுக்கு இதுவரை அம்மானியம் வழங்கப்படவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, விஞ்ஞானக் கூடங்கள் இல்லாததன் காரணமாக சுற்று வட்டாரத்தில் இருக்கும் கிராம மக்கள் விஞ்ஞானக் கூடம் இருக்கும் நகரத்திற்கு வருகிறார்கள். ஆகவே, அந்தக் கல்வி நிலையங்களில் போதிய அளவுக்கு மாணவர்கள் சேரவில்லை. இப்படிப்பட்ட விஞ்ஞானக் கூடம் அமைக்கப்படுமானால், அங்கே மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாவதற்கு வசதி ஏற்படும். ஆகவே, அரசு அதை விரைவாகச் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆண்டு ஒன்றுக்கு 40 அல்லது 50 விஞ்ஞானக்கூடம் அமைப்பதற்காக ரூ. 40,000 வழங்கப்படுகிறது. இதை ஒவ்வொரு கல்வி வட்டத்திலும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் என்ற அளவில் தேர்ந்து எடுத்து செய்கிறோம். 1,200, 1,000, 900 என்று மாணவர்கள் இருக்கும் பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்கள் இல்லாத நிலையில் அவைகளுக்கு முன்னுரிமை வழங்கித்தர வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பள்ளிகளுக்குப் பயன்படத் தக்க அளவிற்கு இயங்கும் ஆய்வுக் கூடம் ஒன்றை சென்ற ஆண்டு 14 மாவட்டங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இயங்கும் ஆய்வுக் கூடங்கள் (மொபைல் லேபரட்ரிகள்) 15 உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பயன்படும் வகையில் இருக்கிறது.

New Course in Engineering Colleges.

*495 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a Committee has been constituted to examine the proposal to introduce sandwich course of study in Engineering Colleges in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.